# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,212 — 1936 ம் ஹூ சித்திரைமீ 8 ந் திகதி, புதன்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிணறு வெட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 437. குறிச்சி—பகல மகாவெவா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொஸ்ககாவத்தை .. | பாண் கிணறு உள்ள நிலம் .. | பகல மகாவெவா குடி எ. எம். பறேஞ்சி அப்புகாமி .. | 0 0 2·27 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஹூ வைகாசி மாசம் 15 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு மாறுவில்லா வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் து தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புததளம் கச்சேரி,
1936 ம் ஹூ சித்திரைமீ 1 ந் உ.

எ ச. கிறிஸ்ரோபல்ஸ,
அரசாட்சி ஏசண்ட்.

---

### உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்பு டிஸ்திறிக், சீனக்கோறளை, அதிகாரிபத்துவே தலவத்துகெலபிற்றியிலிருக்கும் அத்நாயகஅச்சிகே டொன் சுகத்தன் சிலவன்ச ஆகிய நான் இலங்கை அரசாட்சியில் 1907 ம் ஹூ 1 ம் இலக்க இலங்கைச் சட்டத்தின் செடியூல் 1 ம், 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குப்பின் இரத்தினபுரி டிஸ்திறிக்கில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்வாக வேலைபார்க்கிறதற்கு றிஜிஸ்திருர் ஜெனறல் அவர்களுக்கு மனுச்செய்வேன் என்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
டி. எஸ். சிலவன்ச.

1936 ம் ஹூ பங்குனிமீ 25 ந் உ.

---


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

123——J. N. 54115—137 (3/36)
T 1